# The Annular Solar Eclipse – 2019
# Observation camp at University of Jaffna

**on 26.12.2019 at 9.30**

http://event.jfn.ac.lk/eclipse/

## Examination for selecting students to the Observation camp in Jaffna and Kilinochchi

Northern Sri Lanka will witness an annular eclipse on 26th December 2019. University of Jaffna has made arrangements to conduct eclipse observation and awareness programs (https://www.timeanddate.com/eclipse/in/sri-lanka/jaffna).

Ancients feared solar eclipses and considered them as a sign of an evil to come. Yet some philosophers of antiquity and Panchangam (Hindu Calendar) understood that solar eclipses happen when sun is obscured by moon. Modern science enabled calculation of the dates and times of eclipses occurrences to utmost precision. Measurements conducted during solar eclipses had also unravelled many physical phenomena. Today a total or an annular eclipse appearing in the skies above the land you live is regarded a blessing. These awesome celestial events arouse curiosity and masses watching the display, feel that "all are humbly united in front of the sun and moon". Appearance of a total or annular solar eclipse is a rare opportunity to cultivate scientific inquisitiveness, rationality in reasoning and human unity. University of Jaffna in collaboration with University of Colombo and Western Norway University of Applied Sciences plans to organize an eclipse observing camps in Jaffna and Killinochchi, mainly for students and conduct lectures on related astronomical topics. Plans are also made to conduct scientific measurement for research during the eclipse. These activities are co-sponsored by the Ministry of Science Technology and Research, Sri Lanka and CBERC project (http://project.jfn.ac.lk/hrncet/).

Organising committee (http://event.jfn.ac.lk/eclipse/index.php/organizing-committee/) of the Solar Eclipse Program has made arrangements to conduct a written examination to select students for participation in the eclipse observation camps (questions will be related to Eclipse and Astronomy in general) on **December 13, 2019 (Friday)**. The examination is open to Grade 8-11 students. Prior to the examination, an informative video session on Solar Eclipse will be displayed at the examination centre to create necessary awareness safety issues in watching an eclipse.

- For more details of the eclipse, please visit https://www.timeanddate.com/eclipse/in/sri-lanka/jaffna.
- For registration to sit the examination, please visit http://event.jfn.ac.lk/eclipse/.
- Applicant can also register by filling hard copy of the application available at their Division Secretariat (DS) office. The application form can be photocopied.
- Deadline for submission (online/via DS office) of the application: **09.12.2019 (Monday)**.
- Date of an informative session on **Solar Eclipse** and Examination: **13.12.2019 (Friday)**
- Detail of the examination centres and other detail of the solar eclipse will be updated at http://event.jfn.ac.lk/eclipse/.

## Organising Committee

***Sponsored by the Ministry of Science, Technology and Research and CBERC project*** (http://project.jfn.ac.lk/hrncet/)

*The Organizing Committee or individual involved in this program is not responsible for any injury happened during participation in the observation camp*

# The Annular Solar Eclipse – 2019
# Observation camp at University of Jaffna
**on 26.12.2019 at 9.30**

**http://event.jfn.ac.lk/eclipse/**

---

### சூரிய கிரகண அவதானிப்பு முகாமுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை

வடஇலங்கை, சூரிய கிரகணத்தை அவதானிக்கும் அரிய வாய்ப்பினை 26 டிசம்பர் 2019 அன்று பெறவுள்ளது. (https://www.timeanddate.com/eclipse/in/sri-lanka/jaffna). முன்னோர்கள் கிரகணங்கள் வரவிருக்கும் தீமைக்கான அறிகுறி எனக் கருதி அஞ்சினர். ஆயினும் சூரியன், சந்திரனால் மறைக்கப்படும் போது சூரிய கிரகணம் நிகழ்கின்றது என்பதை சங்க இலக்கிய கர்த்தாக்களும் பின்வந்த தத்துவஞானிகளும் எடுத்துரைத்துள்ளனர். கிரகண நிகழ்வுகளின் திகதிகளையும், நேரங்களையும் நவீன விஞ்ஞானம் மிகத் துல்லியமாகக் கணக்கிட உதவியபோதிலும், கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலத்திலேயே தமிழர் பண்பாட்டின் ஒரு அங்கமாக திகழும் பஞ்சாங்கம் (Hindu Calendar) இவற்றை ஏலவே துல்லியமாகக் கணித்துள்ளது. சூரிய கிரகணங்களின் போது நடத்தப்பட்ட அளவீடுகள் பல பௌதீக நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளன. இன்று நாம் வாழும் வடஇலங்கையின் வான் பரப்பிலே தோன்றவுள்ள முழு அல்லது வலய (annular) சூரிய கிரகணம் ஒரு அற்புத நிகழ்வாகக் கருதப்படுகிறது. இந்த வான் நிகழ்வுக் காட்சிகளை ஆர்வத்துடன் பார்க்கவிருக்கும் மக்கள் எல்லோரும் சூரியன் மற்றும் சந்திரனுக்கு முன்னால் ஒன்றுபடவுள்ளனர். முழு அல்லது வலய (annular) சூரிய கிரகணத்தின் தோற்றம் விஞ்ஞான ஆய்வு மற்றும் மனித ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாகும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகம் ஆகியவை யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும சூரிய கிரகண அவதான முகாம்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கு வானியல் தொடர்பான தலைப்புகளில் விரிவுரைகளை நடாத்தவும், கிரகணத்தின் போது விஞ்ஞான ஆய்வுக்குத் தேவையான அளவீடுகளை மேற்கொள்ளவும் அமெரிக்காவிலிருந்து ஆய்வுக்குழுவினர் வருகைதருவதற்குரிய ஒழுங்குகளை யாழ் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. இந்நிகழ்விற்காக விஞ்ஞான தொழிநுட்ப உத்தியோகத்தர்களையும் நிதியுதவியினையும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு வழங்குகின்றது. இதனுடன் இணைந்து நோர்வே உயர்ஸ்தானிகராலயம் CBERC செயற்றிட்டம் (http://project.jfn.ac.lk/hrncet/) கீழ் அனுசரணை வழங்குகின்றது.

சூரிய கிரகணம் தொடர்பாக எழுத்துப் பரீட்சை (வினாக்கள் பொதுவாக கிரகணம் மற்றும் வானியல் தொடர்பானதாக அமையும்) எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ம் திகதி அன்று நடாத்த ஒழுங்கமைப்புக் குழுவினரால் (http://event.jfn.ac.lk/eclipse/index.php/organizing-committee/) ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இப்பரீட்சையானது தரம் 8-11 பாடசாலை மாணவர்களுக்களுக்கானது. இத் தேர்வுக்கு முன்னர், சூரிய கிரகணத்தைப் பற்றியும் அதனைப் பாதுகாப்பான முறையில் அவதானிப்பது பற்றிய விளக்கவுரையுடன் கூடிய காணொளி பரீட்சை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

- இச் சூரிய கிரகணத்தைப்பற்றிய விபரங்களுக்கு https://www.timeanddate.com/eclipse/in/sri-lanka/jaffna ஐப் பார்வையிடவும்.
- பரீட்சையில் தோற்றுவதற்கான பதிவு செய்வதற்கு, http://event.jfn.ac.lk/eclipse/ ஐப் பார்வையிடவும்.
- இவ்விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி உங்கள் பிரதேச செயலகங்களில் அவற்றை ஒப்படைப்பதன் மூலமும் பரீட்சைக்குப் பதிவு செய்யலாம். (தேவைப்படின் விண்ணப்பப் படிவத்தினை பிரதியாக்கம் செய்யலாம்.)
- விண்ணப்பத்தை (இணையவழி / பிரதேச செயலகங்கள் வாயிலாக) சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதி: **09.12.2019 (திங்கட் கிழமை)**.
- சூரிய கிரகணம் குறித்த விபரணக் காட்சியும் பரீட்சையும் இடம்பெறும் திகதி: **13.12.2019 (வெள்ளிக் கிழமை).**
- பரீட்சை மண்டபம் நேரம் மற்றும் சூரிய கிரகணம் தொடர்பான ஏனைய விபரங்கள் பின்வரும் http://event.jfn.ac.lk/eclipse/ இணையத்தளத்தில் இற்றைப்படுத்தப்படும்.

**ஒழுங்கமைப்புக் குழு**

---

***Sponsored by the Ministry of Science, Technology and Research and CBERC project*** (http://project.jfn.ac.lk/hrncet/)

*The Organizing Committee or individual involved in this program is not responsible for any injury happened during participation in the observation camp*